ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தொல்காப்பிய உரை மரபுகள்

**முனைவர் ச.ஸ்டாலின் சத்தியா,**

தமிழ் துறைத் தலைவர்,

பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

மண்ணிவாக்கம், சென்னை – 48.

மின்னஞ்சல் முகவரி: stalinsathiya2011@gmail.com

**ஆய்வு நோக்கம்:**

தொல்காப்பியரின் சிந்தனையில் தோன்றிய 'தொல்காப்பியம்' எனும் இலக்கண நூல் தமிழ் இலக்கியத்தின் பொக்கிசம் ஆகும் . தொல்காப்பியத்தின் சிறப்புகளை வெளிக் கொணர உரையாசிரியர்கள் காண்டிகை உரை , விருத்தி உரை , பொழிப்புரை போன்ற பல்வேறு உரை வகைகளை தேர்ந்தெடுத்து உரை எழுதி உள்ளனர். உரையாளர்கள் வகுத்த உரைகள் தொல்காப்பியருடைய நோக்கத்தை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளதா என்பதை நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம் :**

முற்காலத்தில் தோன்றிய இலக்கண இலக்கிய நூற்களின் மூலக்கருத்தினை எத்தகைய விளக்கங்களும் இல்லாமல் நேரடியாகவே அதனைப் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் பண்டைத் தமிழர்களிடம் இருந்துள்ளது. மூல நூலின் சிறப்புகளை அறிந்து கொள்ள ஆசிரியரின் உதவி தேவைப்பட்டது. இந்த உதவியை செய்தவர்கள் உரையாசிரியர்கள் ஆவார். மூலநூலை எழுதிய ஆசிரியரே உரை எழுதும் முறையும் வழக்கத்தில் இருந்துள்ளது. தமிழ் மொழியில் நூலாசிரியரே உரை எழுதும் முறையைத் தொடங்கியவர் ஐயனாரிதனார் ஆவார். மூல நூலாசிரியர்களுக்கு இணையாக உரையாசிரியர்களைப் போற்றுவது தமிழ் மரபு. இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும், காண்டிகை , விருத்தி என்ற வடிவங்களிலும், தற்காலத்தில் தெளிவுரை என்ற வடிவத்திலும் உரை வகுத்துள்ளனர். உரை வகுக்கும் போது முன் நூற்பாவோடு தொடர்பு படுத்தி உரை அமைப்பதோடு நில்லாமல் அதோடு தொடர்புடைய பிற நூற்பாக்களைச் சுட்டியும் , பிற இயல் நூற்பாக்களைச் சுட்டியும் உரை அமைத்துள்ளனர்.

**திறவுச் சொற்கள்:**

தொல்காப்பியம், நன்னூல், உரையாசிரியர்கள் , உரையாசிரியர்களும் திறனாய்வுக் கோட்பாடுகளும்

**முன்னுரை**

முற்காலத்தில் தோன்றிய இலக்கண இலக்கிய நூற்களின் மூலக்கருத்தினை எத்தகைய விளக்கங்களும் இல்லாமல் நேரடியாகவே அதனைப் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் பண்டைத் தமிழர்களிடம் இருந்துள்ளது. நாளடைவில் படித்துப் புரிதல் குறைவு பட்டதனால் இலக்கண இலக்கியங்களுக்குத் தகுந்த விளக்கங்கள் - விளக்க உரைகள் தேவைப்பட்டன. அதனை நிறைவு செய்தவர்கள் உரையாசிரியர்கள் ஆவார். உரையாசிரியர்களில் காலத்தால் முற்பட்ட இளம்பூரணர் முதல் தற்காலம் வரை பல்வேறு உரையாசிரியர்கள் இலக்கண இலக்கியங்களுக்கு உரை வகுத்துக் கொண்டிருக்கின்றனர். இவ் உரையாளர்களுக்கு இடையே உள்ள கால இடைவெளி, நாகரிகப் பண்பாட்டுக் கலாச்சார கூறுகள் ஆகியவற்றின் தாக்கங்கள் இவை உரைகளிலும் இயல்பாகவே இடம் பெற்றுள்ளன. மேலும் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் முகமாக காண்டிகையுரை,விருத்தியுரை, பொழிப்புரை போன்ற பல்வேறு உரை வகைகளையும் தேர்ந்தெடுத்துள்ளார்கள். தொல்காப்பியத்திற்கு பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு உரையாளர்கள் உரை வகுத்து உள்ளார்கள் இவ்வுரைகள் அனைத்தும் தொல்காப்பியருடைய நோக்கத்தை வெளிப்படுத்தக் கூடிய நிலையில் அமைதல் வேண்டும் அப்போதுதான் பண்டைத் தமிழரது இலக்கண இலக்கிய மரபுகளை நாம் நன்கு அறிந்து கொள்ள முடியும்.

**தொல்காப்பியம்- பெயர்க் காரணம்**:

தமிழின் முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் பெயர் காரணம் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

1) தொல்காப்பியம் என்னும் நூலின் பெயருக்கு இரண்டு காரணங்கள் அமைந்து விளக்குகின்றன. முன்னது ஆசிரியர் பெயரால் அமைந்ததாகும் அஃதாவது தொல்காப்பியரால் இயற்றப்பட்ட காரணத்தால் தொல்காப்பியம் என்னும் பெயர் சூட்டப்பட்டது. இக்காரணம் மிகவும் எழிலுடைய காரணமாகும்.

பின்னது தொல்காப்பியர் தாம் நூலை இயற்றி முடித்தவுடன் பாண்டிய அவைக்கு எடுத்துச் சென்று பல புலமைமிகு சான்றோர்கள் முன்னிலையில் படித்துக் காட்டி நூலினை வெளிப்படுத்தி உள்ளார். அங்ஙனம் அரசவையில் நூலை வெளியிட்ட ஞான்று பாண்டியனும் பல சான்றோர்களும் கேட்டு கழி மகிழ்வடைந்தனர். தொல்காப்பியர் தம் நூலுக்கு பெயர் சூட்டும் வாய்ப்பினை அரசனுக்கும் அவையோருக்கும் விட்டிருத்தல் கூடும். அரசனும் அவைச் சார்ந்தவர்களும் ஒருங்கு ஆராய்ந்து தொல்காப்பியம் என்னும் உன்னதப் பெரினைச் சூட்டி இருத்தல் கூடும். (புலவர். செந்துறை, 1962, பக்.35-36)

2) 'காப்பியம்' என்ற சொல் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகிய முற்கால இலக்கண இலக்கியங்களில் இடம்பெறவில்லை. ஆயின் தொல்காப்பியம், தொல்காப்பியன் என்ற சொற்களில் தொல் என்ற அடையுடன் இச்சொல் வழக்குப் பெற்றுள்ளது. (இரா. காசிராசன்,1973, ப.649)

3) தொல்காப்பியன் தொகுத்தும், வகுத்தும், சேர்த்தும் எழுதிய நூல் ஆதலால் தொல்காப்பியம் என்ற பெயரைப் பெற்றது. தொல்காப்பியம் என்ற சொல்லை ஒரு சொல்லாகக் கொள்வது ஒருமுறை. இச்சொல்லின் இணைப்பாக கொள்வது மற்றொரு முறை தொல்+ காப்பு + இயம் என்று பிரித்துப் பழமையைக் காத்து இயங்கும் நூல் என்று சொல்வது மேலும் பொருந்தும்.(ச.வே. சுப்பிரமணியன், 1999, ப.33)

இவ்வாறு 'தொல்காப்பியம்' பெயர்க் காரணம் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன இவற்றுள் தொல் + காப்பு+ இயம் என்று பிரித்துப் பழமையினைக் காத்து இயங்கும் நூல் எனக் கொள்ளுதல் சாலச் சிறந்ததாகும்.

**உரைகள் தோன்றக் காரணம்:**

உரைகள் தோன்றுவதற்கு பின்வரும் காரணங்களைக் குறிக்கலாம்.

**தெரிந்து கொள்ள இயலாத நிலை:**

தொடக்க காலத்தில் தோன்றிய நூல்களில் பல படித்துப் புரிந்து கொள்வதற்கு கடினமாக இருந்துள்ளது. இதற்கு தலைமுறையினரிடையே ஏற்பட்ட கால இடைவெளியும் காரணம் ஆகும். இதனால் மூல நூலில் உள்ள சொற்களின் பொருள் வேறுபட்டது. நூலாசிரியர்கள் பயன்படுத்திய சொற்களில் பல வழக்கிலிருந்து மறைந்தும் காணப்பட்டன. இதனால் பிற்கால சந்ததியினர் நூற்களை கற்றுக் கொள்வதற்கு கற்றறிந்த சான்றோர்களின் உதவியை நாடினர்.

**ஆசிரியரின் உதவி தேவைப்படல்**:

தற்காலத்தில் பழமையான நூற்களை கற்றுத் தெளிவடைய வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடையே நிரம்ப காணப்படுகின்றது. இதனை நிறைவேற்றும் வண்ணமாக மூல நூலில் உள்ள செய்திகளை விளக்கியுள்ளனர். பழைய நூல்களை வழங்கியவர்களே ஆசிரியர், ஆசான், கணக்காயர் முதலிய பெயர்களால் அழைக்கப்பட்டனர். ஆசிரியர் களிடம் போய் பாடங்களைப் படிப்பதற்கு முன்பாகவே அந்நூலில் உள்ள செய்யுள்களை மாணவர்கள் நன்கு கற்றுக் கொள்கின்றனர். இப்பயிற்சி 'பாடம் ஓதுதல்' அல்லது 'பாடம் போற்றுதல்' என்ற சொல்லாடல்களில் வருகின்றது என்று தமிழில் உரைகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூலில் கூறியுள்ளார் . (மு.வை. அரவிந்தன்,1968, ப.196)

**ஆசிரியரே எழுதிய உரைகள்:**

மூல நூலை எழுதிய ஆசிரியரே உரை எழுதும் முறையும் வழக்கத்தில் இருந்துள்ளது. நூலாசிரியர் காலத்திலேயே அவருடைய நூல் தவறாக பொருள் கொள்ளப்பட்டதைக் கண்ட நூலாசிரியரே உரையை எழுதியும் இருக்கலாம். மேலும் ஒரு நூலுக்கு பல உரைகள் தோன்றியும் தான் சொல்ல வந்த கருத்தை விளக்காமல் செல்லும் போது நூலாசிரியரே தம் நூலுக்கு தாமே உரை எழுதிச் சென்றிருக்கலாம். தமிழ் மொழியில் நூலாசிரியரே உரை எழுதும் முறையை தொடங்கியவர் ஐய்யனாரிதனார் ஆவார். அவர் புறப்பொருள் வெண்பாமாலைக்குச் சூத்திரம் எழுதி

அவற்றின் கீழே துறைகளை விளக்கும் கொளுக்களை அமைத்து ஒவ்வொரு துறையினையும் விளக்கும் வெண்பா ஒன்றையும் இயற்றியுள்ளார்.

**உரை – விளக்கம்:**

உரை என்பது எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு பல்வேறு நூல்கள் இலக்கணம் கூறுகின்றன. அவற்றில் காலத்தால் முந்தைய தொல்காப்பியம் உரை எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு இலக்கணம் கூறுகின்றது.

பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது காண்டிகையாகும் (தொல்.பொருள்.மர.103)

என்று கூறுவதோடு நில்லாது. மேலும்,

சூத்திரத் துட் பொரு ளன்றியும் யாப்புற
வின்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற உரைப்பது உறையெனப்படுமே. (தொல்.பொருள்.மர.105)

என்று தொல்காப்பியர் கூறியுள்ளதைப் பார்க்கும் போது அவர் காலத்திற்கு மிக முற்பட்ட காலத்திலேயே காண்டிகை , விருத்தி ஆகிய உரை வகைகள் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

இறையனார் அகப் பொருளுக்கு நக்கீரர் எழுதிய உரையில், உரை நான்கு வகைப்படும் என்று கூறுகின்றார். அவை "கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத் திரட்டி அகலங்கூரல் என" (நக்கீரர், (உ.ஆ) 1953,ப.14) விளக்கம் கொடுக்கின்றார்.

நம்பியகப் பொருளும் உரை குறித்த விளக்கத்தைத் தருகின்றது. அதில்,

கருத்துரை கண்ணழிவு பொழிப்புத் திரட்ட
லகலங் கூற லென நால் வகைத்தே
புகலுஞ் சூத்திரப் பொருளுரை யென்ப (நம்.நூற்.12)

என வரையறை செய்யப்பட்டுள்ளது. கருத்துரைத்தலாவது, சூத்திரத்து உட்கோள் உரைத்தல், கண்ணழித்தலாவது, சூத்திரத்து சொல் தோறும் பொருளுரைத்தல், பொழிப்புத் திரட்டலாது, சூத்திரத்துப் பொருளை எல்லாம் தொகுத்துரைத்தல், அகலம் கூறுதலாவது சூத்திரத்துப் பொருளைத் தூய்மை செய்வதற்கு விரித்துரைத்தலாகும்.

மேலும் நன்னூல்,

பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினா விடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனம் என்று ஈர்ஏழ் உரையே (நன்.நூற்.21)

என்று மேற்குறிப்பிட்ட பதினான்கு உறுப்புகளையும் உள்ளடக்கியதாக உரையின் பொது இலக்கணம் அமைவதாக நன்னூல் குறிப்பிடுகின்றது. அஃது காண்டிகை , விருத்தி என இரு வகைப்படும் என்பதும் அவர் கருத்தே ஆகும்.

**காண்டிகையின் இலக்கணம்:**

கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினா விடை ஆக்கலானும்
சூத்திரத்துட் பொருள் தோற்றுவ காண்டிகை (நன்.நூற்.22)

மேற்கூறிய கருத்துரையும், பதவுரையும், உதாரணமும் ஆகிய மூன்று வகைகளாலும், அம்மூன்றனுடன் வினாவும், விடையும் ஆகிய இரண்டு வகைகளையும் சுட்டிச் சொல்லுதலாலும் சூத்திரத்தில் உள்ள பொருளை விளக்கி உரைப்பன காண்டிகை உரையாகும்.

**விருத்தியுரையின் இலக்கணம் :**

சூத்திரத்து உட்பொருள் அஞ்சியும் ஆண்டைக்கு
இஞ்றியமை யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐயம் அகலஐங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி (நன்.நூற்.23)

சூத்திரத்தில் உள்ள பொருள் மட்டுமின்றி அவ்விடத்திற்கு அவசியமான எல்லாப் பொருள்களும் விளங்கும்படி தன் உரையாலும், ஆசிரிய வசனங்களாலும் மேற்கூறிய காண்டிகை உறுப்பு ஐந்தினாலும், சந்தேகந்தீர மெய்யான பொருளைக் குறைவு படாமல் விரித்துரைப்பது விருத்தி உரையாகும்.

**நூலாசிரியர் - உரையாசிரியர் சிறப்பு:**

தமிழ் இலக்கிய உலகில் நூலாசிரியரும் உரையாசிரியரும் சிறப்பு பெற்று காணப்படுகின்றனர். மூல நூலாசிரியர்களுக்கு இணையாக உரையாசிரியர்களைப் போற்றுவது தமிழ் மரபு. இதனை மகத்துவம் வாய்ந்த அகத்தியன் , ஒல்காப் புலமைத் தொல்காப்பியன், தெய்வப்புலவன் திருவள்ளுவன், பல்கலைக் குரிசில் பவணந்தி என்பது போல் , உளங்கூர் கேள்வி இளம்பூரணர், ஆனாப் பெருமை சேனாவரையர், உச்சி மேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் என வரும் சிறப்புப் பெயர்களாலே நன்கு உணரலாம்.

ஆக்கியோர் பெயரை நூல்கள் பெற்றது போலவே உரையாசிரியர்களின் பெயரால் உரைநூல்கள் பெயர் பெற்று விளங்கின. இளம்பூரணர் உரையை இளம்பூரணம் என்றும், சேனாவரையர் உரையை சேனாவரையம் என்றும், பேராசிரியர் உரையை பேராசிரியம் என்றும், நசினார்கினியர் உரையை

நச்சினார்க்கினியம் என்றும் சுட்டும் வழக்கம் இலக்கிய உலகில் பல்லாண்டுகளுக்கு முன்னரே ஏற்பட்டுள்ளது.

**நிறைவாக....**

உரைகளின் தோற்றம், வளர்ச்சி , சிறப்பு , தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் துண்டு கோலாய் அமைகிறது. அன்று முதல் இன்று வரை தொல்காப்பிய உரைகள் ஏதோ ஒரு உரை வகையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதை அறிய முடிகின்றது. காலமாறுதலுக்கு ஏற்ப நூல்களை பதிப்பாக்கம் செய்வதால் நூல்களும் நல்ல வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றன. இளம்பூரணரும் , நச்சினார்க்கினியரும் காண்டிகை, விருத்தி என்ற வடிவங்களிலும், தற்காலத்தில் தெளிவுரை என்ற வடிவத்திலும் உரை வகுத்துள்ளனர். தொல்காப்பிய நூற்பாக்களில் இடம்பெறும் அனைத்து சொற்களுக்கும் விளக்கமான உரை எழுதும் நிலையும் இருந்துள்ளது. அதே வேளையில் குறிப்பிட்ட சில சொற்களுக்கு மட்டும் பொருள் எழுதும் பழக்கமும் இருந்துள்ளது. உரையாளர்கள் வகுக்கும் உரைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன உரை முன்னவர்களான இளம்பூரணர், நச்சினாக்கினியர் உரைகளை மறுப்பதோடு புத்துரைகளையும் அமைக்கின்றனர் . கால மாறுதல்களுக்கு ஏற்ப உரைகளில் மாற்றம் ஏற்பட்டாலும் தமிழ் மரபு, தமிழ் கலாச்சாரம் மாறாமல் தமிழ் மொழியை வளப்படுத்துவதில் தொல்காப்பிய உரையாசிரியர்களின் பங்கு இன்றியமையாதது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**துணைநூற்பட்டியல் :**

1. உரையாசிரியர்கள் , அரவிந்தன், மு.வை., மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1968.
2. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் (உ.ஆ.) திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் , சென்னை - 108 , 1986
3. தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் (உ.ஆ.) திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் , சென்னை - 108 , 2000
4. தொல்காப்பியர் காலமும் கலையும் , செந்துறைமுத்து, வானதி பதிப்பகம் , பிஸ்னஸ் வீதி பிரஸ், சென்னை- 14 . 1962 .
5. தொல்காப்பியப் பதிப்புகள், சுப்பிரமணியன், ச.வே., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 113 , 1992
6. நன்னூல், பவணந்தி முனிவர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 1 , 1958.